# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 351/ந/2025, நாள் 13.02.2026

G. மோகன்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி, ஆத்தூர், – எதிர்மனுதாரர்
சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டம், ஆத்தூர், சாத்தனார் தெரு, கதவு எண்.107, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.மோகன் என்பவரின் 28.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.10.2025 அன்று பெறப்பட்டு, 351/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், ஆத்தூர், சாத்தனார் தெரு, கதவு எண்.107, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.மோகன் என்பவரின் 28.09.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

திரு.M.சாரங்கபாணி H1 எழுத்தர் அவர்களின் பராமரிப்பில் இருந்து வரும் என்னுடைய பணிப்பதிவேட்டினை 2 ஆண்டுகளாக தவறவிட்டும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருந்து வருகிறார். எனவே திரு.M.சாரங்கபாணி, H1 எழுத்தர் மீது தக்க நடவடிக்கை எடுத்து தவறவிட்ட பணிப்பதிவேட்டினை கண்டுபிடித்தோ அல்லது மாற்று பணிப்பதிவேடு தயார் செய்து நான் ஒய்வு பெறும் நாளில் மகிழ்ச்சியுடன் ஓய்வூதியம் பெற வேண்டியும் அன்னார் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து ஆத்தூர் நகராட்சி ஆணையரிடம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. ஆத்தூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண். 3851/2025/சி1, நாள் 24.12.2025–ன் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

இவ்வலுவலக பொது சுகாதார பிரிவு ஓட்டுநர் திரு.G.மோகன் அவர்களின் பணிப்பதிவேடு காணவில்லை என்று 08.10.2024ம் தேதிய புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பொது சுகாதார பிரிவு முன்னாள் எழுத்தர் (எச்1) திரு.ம.சாரங்கபாணி இளநிலை உதவியாளருக்கு கடந்த 08.10.2024 அன்று குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது. உரிய காலத்தில் விளக்கம் அளிக்காத காரணத்தால் அன்னார் மீது குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்.0686/2025/சி1, நாள் 04.03.2025–ல் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீட்டு விதி 17(பி)ன் கீழ் வழங்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் திரு.G.மோகன் ஓட்டுநர் கடந்த 28.09.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார். புகார் எண் 351/M/2025 நாள் 17.10.2025ன்படி மேற்படி ஓட்டுனர் பணிப்பதிவேடு தொடர்பாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 30.10.2025 அன்று சுற்றறிக்கை வழங்கி தங்களது இருக்கையில் உள்ள பீரோ, டேபிள் மற்றும் அக்கம் பக்கத்தில் தேடி பார்த்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. தற்போது வரை திரு.G.மோகன் அவர்களின் பணிப்பதிவேடு கண்டுபிடிக்க இயலவில்லை. அதனை தொடர்ந்து பணிப்பதிவேடு கண்டுபிடித்து கொடுக்க காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து புதிய பணிப்பதிவேடு துவங்க இவ்வலுவலக சி1 எழுத்தர், எச்1 எழுத்தர், நகர்மன்ற எழுத்தர் மற்றும் பதிவேடு எழுத்தர் ஆகியோருக்கு சுற்றறிக்கை வழங்கி திரு.G.மோகன் அவர்களின் பணிப்பதிவேடு துவங்குவதற்கு தேவையான நகர்மன்ற நியமனக்குழு பதிவேடு, பதவி உயர்வு கோப்பு, ஊதிய உயர்வு, தேர்வுநிலை/சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம் செய்த கோப்பு, ஊதியக்குழு நிர்ணயம், விடுப்பு அனுமதிக்கப்பட்ட கோப்புகள், வருகை பதிவேடு, ஊதிய பதிவேடு மற்றும் இதர ஆவணங்கள் சேகரித்து வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஓட்டுநர் திரு.G. மோகன் அவர்களிடம் தன்வசம் உள்ள பணி தொடர்பான ஆவணங்கள் அசல்/நகல்கள் இருந்தால் உடன் வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு.G.மோகன் அவர்களின் பணிப்பதிவேடு துவங்குவதற்கான அனைத்து பூர்வாங்கப்பணிகள் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணி 31.01.2026க்குள் முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரரான ஆத்தூர் நகராட்சி ஆணையரையும், 20.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 02.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 20.01.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"ஆத்தூர் நகராட்சியில் ஓட்டுனராகப் பணியாற்றி வரும் எனது பணிப்பதிவேடு காணாமல் போய்விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் மாற்றுப்பணிப்பதிவேடு தயார் செய்யாமல் உள்ளதால் எனக்கு வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்படாமல் உள்ளது.

எனவே எனக்கு விரைந்து மாற்றுப்பணிப்பதிவேடு தயார் செய்து வழங்குவதற்கு ஆவன செய்யும்படி இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரரான ஆத்தூர் நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண். 3851/2025/சி1, நாள் 19.01.2026–ல் எதிர்மனுதாரரான ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் தற்போது வாக்காளர்

பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பணியின் தொடர்ச்சியாக No Mapping வாக்காளர்களுக்கு அழைப்பாணை வழங்கி ஆணையர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அவர்களால் விசாரணை செய்து உரிய ஆவணங்கள் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் பணி நடைபெற்று வருவதாலும், ஆதலால் 20.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நகராட்சி ஆணையரின் சார்பாக திரு.G.மோகன் என்பவரது புகார் மனு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான விளக்கம் நிர்வாக அலுவலர்(மேலாளர்) திரு.பா.சீனிவாசன் அவர்கள் ஆஜராகி உரிய விளக்கம் அளிக்க அனுமதி அளிக்க கேட்டுக்கொண்டதனடிப்படையில் நிர்வாக அலுவலர்(மேலாளர்) திரு.பா.சீனிவாசன் என்பவர் விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரரின் மாற்றுப்பணிப்பதிவேடு தயார் செய்ய அலுவலர்களுக்கு சுற்றறிக்கை வழங்கி உரிய நடவடிக்கை ஆத்தூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கான மாற்றுப் பணிப் பதிவேடு வரும் 31.01.2026க்குள் தயார் செய்யப்பட்டு தகவல் மனுதாரருக்கும், இம்முறைமன்ற நடுவத்திற்கும் தெரிவிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஆத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆத்தூர் நகராட்சி நிர்வாக அலுவலர்(மேலாளர்) வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

H1 எழுத்தர் திரு.M.சாரங்கபாணி என்பவர் பராமரிப்பில் இருந்து வந்த தன்னுடைய பணிப்பதிவேட்டினை தவறவிட்டு 2 ஆண்டுகள் ஆகியும், எந்த முன்னேற்றமும் இல்லாமல், தவறவிட்ட பணிப்பதிவேட்டினை கண்டுபிடித்தோ அல்லது மாற்று பணிபதிவேடு தயார் செய்தோ தான் ஓய்வு பெறும் நாளில் மகிழ்ச்சியுடன் ஓய்வூதியம் பெறவும், தனது பணிப்பதிவேட்டை தவறவிட்ட பணியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

மனுதாரரான திரு.G.மோகன் என்பவரது பணிப்பதிவேடு காணவில்லை என்ற புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பொது சுகாதார பிரிவு எழுத்தர் எச்1 திரு M.சாரங்கபாணி, இளநிலை உதவியாளருக்கு 08.10.2024 அன்று குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது என்பதும், ஆனால் உரிய காலத்தில் விளக்கம் அளிக்காத காரணத்தால் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீட்டு விதி 17(பி)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும், மனுதாரரது பணிப்பதிவேட்டை தேடிபார்த்து கண்டுபிடிக்க இயலவில்லை என்பதால் பணிப்பதிவேடு கண்டுபிடித்து கொடுக்க காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், அதனைத் தொடர்ந்து புதிய பணிப்பதிவேடு துவங்க அலுவலக சி1 எழுத்தர், எச்1 எழுத்தர், நகர்மன்ற எழுத்தர் மற்றும் பதிவேடு எழுத்தர் ஆகியோருக்கு சுற்றறிக்கை வழங்கி திரு.G.மோகன் அவர்களின் பணிப்பதிவேடு துவங்குவதற்கு தேவையான பூர்வாங்கப்பணிகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், 31.01.2026க்குள் மாற்றுப்பணிப்பதிவேடு தயார் செய்யப்பட்டு தகவல் மனுதாரருக்கும், இம்முறைமன்ற நடுவத்திற்கும் தெரிவிக்கப்படும் என தெரிவித்திருப்பது ஆத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக அலுவலர்(மேலாளர்) வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் மனுதாரர் திரு .G. மோகன் என்பவருக்கு மாற்றுப் பணிப் பதிவேட்டினை 31.03.2026க்குள் தயார் செய்து அதனடிப்படையில் இறுதி அறிக்கையினை மனுதாரருக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் அனுப்பி வைத்திடுமாறு ஆத்தூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. G.மோகன்,
த/பெ. (லேட்) கோபால்,
107, சாத்தனார் தெரு,
ஆத்தூர் அஞ்சல் – 636 102.
சேலம் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
ஆத்தூர் நகராட்சி,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

17/2/26
செயலாளர்.